**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 - 2022**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூன் 28 ஆம் திகதிய 2947-எஸ்ஆர்ஐ மற்றும் 2948-எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10 (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் மற்றும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 இன் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 இன் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் வசிப்பவர்களிற்கான நகர சூழல் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 இன் குறிக்கோளாக உள்ளதுடன் (அ) கொழும்பு நகரத்தில் நீர் வழங்கல் முறைமையை புனரமைத்து விரிவாக்குதல் மற்றும் வருமானமற்ற நீரைக் குறைத்தல், (ஆ) கொழும்பு பெரும்பாக பகுதியில் கழிவு நீர் அகற்றல் சேவையை முன்னேற்றுதல், (இ) சேவை வழங்குநர்களின் நிறுவனரீதியான கட்டமைப்பு மற்றும் இயலளவை வலுப்படுத்தல் மற்றும் (ஈ) முதலீட்டு செயற்திட்டங்களை முகாமை செய்து அமுல்ப்படுத்துதல் என்பன எதிர்பார்க்கப்பட்டது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 1 இன் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,784 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 112 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 11,088 மில்லியன் அல்லது 75 சதவீதத்திற்கு சமமான ஐ.அ.டொலர் 84 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 3,696 மில்லியன் அல்லது 25 சதவீதத்திற்கு சமமான ஐ.அ.டொலர் 28 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 1 அதன் நடவடிக்கைகளை 2013 செப்தெம்பர் 25 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர் நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 1 இன் காலப்பகுதி 2021 யூன் 30 வரை மூன்று தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 இன் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும்

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 1 இன் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| நிதிப் பிரமாண இல. 128(1) உ, இல. 507, இல. 756 | வருடாந்த நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் ஒவ்வொரு வருடமும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு செயன்முறை பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், கணக்காய்வு திகதியான 2023 ஏப்ரல் 10 வரையிலும் அது செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு ஆண்டும் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படுகிறது. அதற்குரிய ஆவணம் விரைவில் அனுப்பி வைக்கப்படும். | விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் கொழும்பு நகரில் வருமானம் அல்லாத நீரை 49 சதவீதத்தில் இருந்து 18 சதவீதம் வரை குறைத்து, 36 மாவட்ட மானியிடல் பகுதிகளில் (DMAS) 466,165 மீற்றர் குழாய் பதிக்கும் பணிகளில் ஈடுபட்டு 62,840 வீடுகளுக்கு இணைப்பு பரிமாற்றங்களை வழங்குதல் மற்றும் கொழும்பு நகரின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியின் நீர் வழங்கல் முறைமையை புனரமைத்து விரிவாக்கதலின் கீழ் NRW ஐக் குறைக்கும் நோக்கத்துடன் இந்த செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு, மீளாய்வாண்டின் இறுதியளவில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், இச் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கம் அடைந்து கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு நகரின் வடக்குப் பகுதியில் உள்ள 16 மாவட்ட மானியிடப்பட்ட பகுதிகளை மேவுகை செய்வதன் மூலம் வருமானம் அல்லாத நீரின் சதவீதத்தை 49 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்துக்குக் கீழே குறைக்கும் நோக்கத்துடன் இந்த செயற்திட்டம் தொடங்கப்பட்டதுடன் ரூபா 20.73 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 139,410.46 பெறுமதியான 16 DMA மானிகளை கொழும்பு நகரின் வடக்குப் பகுதியில் செயற்திட்டத்தின் இலக்கு அடைந்து கொள்ளப்பட்டுள்ளதா என்பதைப் பார்க்க நீர் ஓட்டத் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக நிறுவப்பட்டிருந்தது. எனினும், மேலே உள்ள 16 DMA மானிகளில் 13 DMA மானிகள் கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 30 இல் குறைபாடுடையதாகவே காணப்பட்டன. | கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட 13 ஓட்ட மானிகள் குறைபாடுடையவை அல்ல என்பதையும், வெளியேற்றப்பட்ட பட்டரிகள் காரணமாக ஓட்ட மானிகளில் சிக்கல் உள்ளது என்பதையும் குறிப்பிடுவது முக்கியமானதாகும். இப்பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் வெளியேற்றப்பட்ட பட்டரிகளுக்கு பதிலாக புதிய பட்டரிகளை மாற்றுவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்துள்ளது. பட்டரிகள் மாற்றப்பட்டவுடன் NRW பெறுமதியின் சரியான கணிப்பீட்டை செயற்படுத்தி ஓட்ட அளவீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். | தற்போதுள்ள பிரச்னைகளை சரி செய்து, செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்த்த விளைவை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 16 DMA மானிகள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் வழங்கல் நிபந்தனைகளின் பிரகாரம் உரிய வழங்குநர் அவற்றுக்கான கொள்வனவு திகதியிலிருந்து 03 வருட உற்பத்தி உத்தரவாதத்தை வழங்கியிருந்தார். எனினும், அந்த மானிகள் 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நிறுவப்பட்டுள்ளன. மேலும் நிறுவப்பட்ட நேரத்தில் கூட 13 மானிகளின் உத்தரவாத காலம் காலாவதியாகியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | மாவட்ட மானியிடப்பட்ட பகுதிகளின் (DMAs) பணிகள் பூர்த்தியடைந்த பின்னர் ஓட்ட மானிகளை உடனடியாக நிறுவும் எண்ணம் இருந்தது, DMAs ஐ பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டதால் பட்டியலிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் செயலிழந்தது. இதன் விளைவாக, ஓட்ட மானிகளை நிறுவுவது தாமதமானது, அவற்றின் நிறுவுதல் இடம்பெறுவதற்கு முனனர் உத்தரவாதக் காலம் காலாவதியாவதை விளைவிக்கிறது. | செயற்திட்ட நடவடிக்கைகள் வேலைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தப்பட வேண்டியிருந்தது. |
| (இ) | ICB 02 ஒப்பந்தத்தின் கீழ் கொழும்பு நகரின் கிழக்குப் பகுதியில் உள்ள 20 மாவட்ட மானியிடப்பட்ட பகுதிகளில் வருமானம் அல்லாத நீர் சதவீதத்தைக் கணிப்பிடுவதற்காக ஐ.அ.டொலர் 180,863.6 இற்கு சமமான ரூபா 26.87 மில்லியன் பெறுமதியான 21 DMA | வெளியேற்றப்பட்ட பட்டரிகள் காரணமாக ஓட்ட மானிகளில் சிக்கல் ஏற்பட்டது. இந்த சிக்கலை தீர்ப்பதற்கு வெளியேற்றப்பட்ட பட்டரிகளை மாற்றுவதற்கு செயற்திட்டம் நடவடிக்கையை எடுத்துள்ளதுடன் | குறைபாடுகளை சீர்செய்வதற்கும் பொருத்தப்பட்ட ஓட்ட மானிகளை பராமரிப்பதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மானிகள் நிறுவப்பட்டுள்ளன. எனினும், 21 மானிகளில் 11 மானிகள் 2023 மார்ச் 30 இல் உள்ளவாறு குறைபாடுடையதாகவே இருந்தன. மேலும், உற்பத்தி உத்தரவாதக் காலப்பகுதிக்கு பின்னர் தேவையான பராமரிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான உள்ளூர் முகவருடன் பராமரிப்பு சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டதுடன் மேற்படி 21 DMA மானிகளில் 18 மானிகளின் 3 வருட உத்தரவாதக் காலப்பகுதி நிறுவப்பட்ட நேரத்தில் காலாவதியாகியிருந்தது. | பட்டரிகளை மாற்றியவுடன், ஓட்ட அளவீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். நிறுவப்பட்ட ஓட்ட மானிகளின் பராமரிப்பைக் கையாள்வதற்கு உள்ளூர் நிபுணர் நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. | |
| (ஈ) | கொழும்பு நகரின் வருமானம் அல்லாத நீர் சதவீதத்தை கண்காணிப்பதற்காக 6 உத்தியோகத்தர்களுடன் மாளிகாகந்தவில் உள்ள NRW கட்டிடத்தில் NWSDB வருமானம் அல்லாத நீர் முகாமைத்துவ அலகு ஒன்றை நிறுவியுள்ளதுடன் இந்த அலகின் அடிப்படை ரீதியான செயற்பாடு DMA மானிகளில் இருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளில் தங்கியுள்ளது. நிறுவப்பட்ட பெரும்பாலான மானிகள் பழுதடைந்துள்ளதால், அந்த அலுவலகத்தின் பணிகள் திட்டமிட்டவாறு செயற்படாததால் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த செயலாற்றலை அளவிட முடியாதிருந்தது. | NRW முகாமைத்துவ பிரிவு உத்தியோகத்தர்கள், மாவட்ட மானியிடப்பட்ட பகுதிகளின் (DMAs) ஓட்ட மானிகள் உட்பட பல தரவு ஆதாரங்களைப் பயன்படுத்தி NRW ஐக் கண்காணிப்பதற்கும் SIV மானிகள் போன்ற மாற்று முறைகளைப் பயன்படுத்துவதற்கும் பொறுப்பாக உள்ளதுடன் விநியோக முறைமையில் உள்ள கசிவுகளை உத்தியோகத்தர்கள் தீவிரமாக கண்காணித்து, ஏதேனும் கசிவுகள் ஏற்படுவதை விடாமுயற்சியுடன் இனங்கண்டு கண்டுபிடிக்கின்றனர். இந்த கசிவுகளை உடனடியாக நிவர்த்தி செய்து சீர்செய்வதன் மூலம், அவை NRW இன் ஒட்டுமொத்த குறைப்பு மற்றும் நீர் வளங்களின் திறமையான முகாமைத்துவத்திற்கு பங்களிக்கின்றன. | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு NRW முகாமைத்துவ அலகை திறமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | வருமானம் அல்லாத நீர் முகாமைத்துவப் பிரிவில் இருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் ICB-1 ஒப்பந்தத்தின் கீழ் குழாய் பதிக்கும் 16 மாவட்ட அளவீட்டுப் பகுதிகளில் உள்ளடக்கப்படுகின்ற 4A மற்றும் 9B ஆகிய 2 மாவட்ட அளவீட்டுப் பகுதிகளில் உள்ள | NRW பிரிவின் கீழ் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் NRW தொடர்பான கசிவுகள், பழுதடைந்த மானிகள், சட்டவிரோத அளவீடுகள் இல்லாத இணைப்புக்கள் போன்ற பிரச்சனைகளை நிவர்த்தி செய்து ஒட்டுமொத்த NRW பெறுமதியை | சட்டவிரோதமான இணைப்புக்கள், கசிவுகள், பழுதடைந்த மானிகள் போன்ற பிரச்னைகளை உடனடியாக தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
| --- | --- | --- | --- |
| | வருமானம் அல்லாத நீரின் சதவீதம் மீளாய்வாண்டின் இறுதியளவில் முறையே 38.92 சதவீதம் மற்றும் 24.46 சதவீதம் என்ற உயர் பெறுமதியை அடைந்திருந்தது. | குறைப்பதற்கு தீவிரமாகச் செயற்படும் பொறுப்பைக் கொண்டுள்ளனர். | |
| (ஊ) | செயற்திட்டம் பூர்த்தியடைந்து தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிடம் ஒப்படைக்கப்பட்டு ஒரு வருடம் கடந்திருந்த போதிலும் 16 மாவட்ட அளவீட்டு பகுதிகளில் ஒப்படைக்கப்பட்ட நீர் பரிமாற்றம் மற்றும் விநியோக முறைமைகள் மற்றும் மாளிகாகந்தவில் உள்ள NRW கட்டிடம் தொடர்பான சொத்துக்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்து மூலதனமாக்கல் செயன்முறை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. | மூலதனமாக்கல் செயன்முறையை முழுமையாக பூர்த்தி செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | இரத்மலானை பிரதான களஞ்சிய வளாகத்தில் நீர் மானி பரிசோதனை பணிமனையை நிர்மாணிப்பதற்கு ரூபா 11 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் 2014 ஆம் ஆண்டு ரூபா 2.2 மில்லியன் முற்பணக் கொடுப்பனவுடன் 2015 நவம்பர் 17 வரையான செல்லுபடியாகும் காலப்பகுதியுடன் தனியார் வங்கியால் வழங்கப்பட்ட ரூபா 2 மில்லியன் மற்றும் ரூபா 611,625 பெறுமதியான முறையே முற்பணக் கொடுப்பனவு உத்தரவாதம் மற்றும் செயலாற்றல் உத்தரவாதத்தை பெற்ற பின்னர் தனியார் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2023 ஏப்ரல் அளவில் ஒப்பந்தம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 09 ஆண்டுகள் கடந்த பின்னரும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் தொடர்பான வேலை எதையும் செய்திருக்கவில்லை. மேலும் முகாமைத்துவம் முற்பணக் கொடுப்பனவு உத்தரவாதத்தின் காலப்பகுதியை நீடிப்பதற்கு அல்லது அந்த உத்தரவாதங்களை காசாக்குவதற்கு எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. இந்த கவனக்குறைவால் செயற்திட்டம் ரூபா 2.2 மில்லியன் சிக்கனமற்ற செலவினத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது. | ஒப்பந்ததாரர் போலியான ஆவணங்களை வழங்கியிருந்தார், மேலும் நட்டத்தை அறவிடுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக NWSDB ஆல் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதி நட்டங்களை ஒப்பந்ததாரர் அல்லது பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

3.3 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | குழாய் பதிக்கப்பட்ட அனைத்து வீதிகளையும் கொழும்பு மாநகர சபையிடம் ஒப்படைத்து ஒரு வருடம் நிறைவடைந்திருந்த போதிலும் செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 109 மில்லியன் பெறுமதியான பிணை வைப்புக்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்படைக்கப்பட்ட வீதிகளுக்கான பிணை வைப்புக்களை விடுவிக்குமாறு CMC இடமிருந்து ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | மேலதிக தாமதமின்றி பிணை வைப்புக்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டம் நிறைவடைந்து ஒரு வருடம் கடந்துள்ள போதிலும் ரூபா 69 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | கையளிக்கும் பணி நடைபெற்று வருகிறது. | NWSDB இற்கு முறையான வழியில் சொத்துக்களை கையளிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது குறித்துக்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கைகளுக்காக உள்ளக கணக்காய்விற்கு தெரிவிக்கப்படுகிறது. | உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளில் உள்ளக கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |